1972 ஆகஸ்ட் 19]

சாத்தூரில் நிப்பு தொழிற்சாலை

திரு. எஸ். எஸ். தென்னரசு : மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இராமநாதபுரம் மாவட்டத்தில் சாத்தூரில் நிப்பு தொழிற்சாலை லாபகரமாக நடைபெறுகிறதா ?

(இ) அதே ஊரில் அரசுத் தரப்பில் பேனா தொழிற்சாலை அமைக்க ஏதேனும் செயற்குறிப்பு உண்டா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) சாத்தூர் கூட்டுறவு நிப்பு தொழிற்சாலை நலிந்த நட்டத்தில் இயங்கி வருகிறது. தற்பொழுது இந்த நட்டம் குறைந்து வருகிறது.

(இ) தொழில் வணிக இலாகாவைப் பொறுத்த மட்டில், சாத்தூரில் அரசுத் தரப்பில் பேனா தொழிற்சாலை அமைக்க செயற்குறிப்பு எதுவும் தற்போது இல்லை.

Mr. CHAIRMAN : Questions 72 to 74 are postponed.

N. M. High School, Elayirampannai

* 75 *Q.*—THIRU M. RAJAH IYER : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether the Government have received any petition from the Assistants of the N.M. High School, Elayirampannai (Virudhunagar Educational District) alleging irregularities in the management of the school; and

(*b*) if so, the action taken thereon ?

ஏழாயிரம் பண்ணையிலுள்ள என். எம். உயர்நிலைப் பள்ளி

திரு. எம். ராஜா அய்யர் : மாண்புமிகு கல்வி–உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) ஏழாயிரம் பண்ணையில் (விருதுநகர் கல்வி மாவட்டம்) உள்ள என். எம். உயர்நிலைப் பள்ளியின் நிர்வாகத்தில் முறை கேடுகள் இருப்பதாகக் குற்றம் சாட்டி மேற்படி பள்ளி உதவியாளர்களிடமிருந்து மனு ஏதேனும் அரசுக்கு வந்துள்ளதா?

(இ) ஆமெனில், அதன் மீது எடுத்த நடவடிக்கை யாது ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(இ) விருதுநகர் மாவட்டக் கல்வி அலுவலர் அப்பள்ளிக்குச் சென்று குற்றச்சாட்டுகளை விசாரித்தார். பள்ளி ஆசிரியர்களுக்கும், நிர்வாகிக்கும் கருத்து வேறுபாடு இருந்ததை சுமுகமாகத் தீர்த்து வைத்தார். தற்போது அவர்கள் முழு ஒத்துழைப்புடன் பணியாற்றுகிறார்கள்.

Township Committee, Kodaikanal

... * 76. Q.—THIRU SAW. GANESAN (on behalf of THIRU G. SWAMINATHAN): Will the *Hon.* the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether it is a fact that a sum of Rs. 2 lakhs being a grant from Government for construction of a tourist rest house has not been utilised by the Township Committee, Kodaikanal, for the last two years;

(*b*) if so, the reasons therefor; and

(*c*) when the construction is proposed to be started?

கோடைக்கானல் நகரியக் குழு

திரு. சா. கணேசன் (திரு. ஜி. சுவாமிநாதன் சார்பில்): மாண்புமிகு கல்வி—உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) பயணிகள் ஓய்வு இல்லம் ஒன்று கட்டுவதற்காக அரசிடமிருந்து மானியமாகப் பெற்ற ரூ. 2 லட்சம் கடந்த இரண்டாண்டுக் காலமாக கோடைக்கானல் நகரியக் குழுவால் பயன்படுத்தப்படவில்லை என்பது உண்மையா?

(இ) ஆமெனில், அதற்கான காரணம் என்ன?

(உ) கட்டுமானப் பணி எப்போது தொடங்கப்படும்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) மானியமாக ஏதும் வழங்கப்படவில்லை. ஆனால் 1970 ஆம் வருடத்தில் கடனாக மட்டும் ரூ. 1.5 இலட்சம் கோடைக்கானல் நகரியத்தில் சுற்றுலா பயணிகள் விடுதி ஒன்று கட்டுவதற்காக வழங்கப்பட்டது. அந்தத் தொகை மதுரை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியில் 24—2—70 ஆம் தேதியிலிருந்து முதலீடு செய்யப்பட்டுள்ளது.